

விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு வட்டம், கான்சாபுரம் கிராமத்தில் அமைந்துள்ள பிளவுக்கல் பெரியாறு அணைப் பகுதியில் நீர்வளத்துறை மேல் வைப்பாறு இராஜபாளையம் வடிநிலக் கோட்டம் சார்பில், ரூ.10 கோடி மதிப்பில் அணையின் பூங்கா புனரமைக்கும் பணி, அதன் உள்கட்டமைப்புகளை புதுப்பித்தல் மற்றும் அணைக்குச் செல்லும் அணுகுசாலையினை மேம்படுத்தும் பணிகளுக்கு மாவட்ட வருவாய் அலுவலர் ரா.ஆனந்தி தலைமையில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார். உடன் திருவில்லிபுத்தூர் ஒன்றிய செயலாளர் மல்லி ஆறுமுகம், வத்திராயிருப்பு ஒன்றிய செயலாளர் முனியாண்டி ஆகியோர் இருந்தனர்.



வேளாண்மையை முக்கியத் தொழிலாகக் கொண்ட விருதுநகர் மாவட்டம், திருச்சுழி தொகுதியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆட்சியில், அவரது ஆணையின் பேரில் 26.10.2024 அன்று அப்பகுதியில் துணைமின் நிலையம் அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டது. தற்போது அப்பணிகள் முடிக்கப்பட்டு, 110/3311 kV துணைமின் நிலையத்தை நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு துவக்கி வைத்தார். ஒன்றிய கழகச் செயலாளர்கள் பொன்னுத்தம்பி, சந்தான பாண்டியன், காரியாபட்டி நகரச் செயலாளர் ஆர்.கே. செந்தில், மாவட்ட வர்த்தக அணி ஜெயச்சந்திரன் என்ற போஸ், தங்க தமிழ்வாணன் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் ஒன்றியக் கழகச் செயலாளர்கள், கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் பங்கேற்றனர்.

### சமக்ர சிக்ஷா திட்டத்தின் கீழ்

# தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசின் நிதி நிலுவையில் உள்ளதா?

## மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி!

புதுடெல்லி, மார்ச் 12-

மக்களவையில் சமக்ர சிக்ஷா (Samagra Shiksha) திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய ஒன்றிய அரசின் நிதி நிலுவை குறித்து தென் சென்னை தொகுதி பாராளு மன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி எழுப்பினார்.



அதன் விபரம் :

2024-25ஆம் ஆண்டிற்கான சமக்ர சிக்ஷா திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய ஒன்றிய நிதி நிலுவையில் உள்ளதா? கடந்த மூன்று ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட, வழங்கப்பட்ட மற்றும் நிலுவையில் உள்ள நிதி விவரங்கள் என்ன?

மேலும், சுமார் ரூ.3,548 கோடி தொகை தமிழ்நாட்டிற்கு நிலுவையில் உள்ளதாக கூறப்படுவது உண்மையா? இதில் 2024-25ஆம் ஆண்டுக்கான ரூ.2,152 கோடி பங்கும் அடங்குமா? தேசிய கல்விக் கொள்கை அமல்படுத்துதல் அல்லது PM SHRI திட்டத்தில் இணைவது போன்ற நிபந்தனைகள் சமக்ர சிக்ஷா திட்ட நிதி விடுவிப்புடன் தொடர்புள்ளதா? மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான பள்ளிக் கல்வி திட்டங்கள் தொடர்ச்சியாக நடைபெற நிலுவையில் உள்ள நிதியை விடுவிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளதா? என்ற கேள்விகளை எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய கல்வி அமைச்சகத்தின் இணை அமைச்சர் திரு.ஜெயந்த் சௌதரி அளித்த பதில்:

கல்வி என்பது இந்திய அரசியலமைப்பின் ஒருங்கிணைந்த பட்டியலில் உள்ள துறையாகும். தேசிய கல்விக் கொள்கை 2020 நாட்டின் கல்வி அமைப்பில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டது. 2021ஆம் ஆண்டில் சமக்ர சிக்ஷா திட்டம் NEP 2020க்கு ஏற்ப மாற்றியமைக்கப்பட்டது.

PM SHRI திட்டம் 2022ஆம் ஆண்டு தொடங்கப்பட்டதாகவும், NEP 2020 கூறுகளை எடுத்துக்காட்டும் மாதிரி பள்ளிகளை உருவாக்குவதே அதன் நோக்கம் என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது.

ஆனால் தமிழ்நாடு அரசு PM SHRI திட்டத்தில் இணைவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், சமக்ர சிக்ஷா திட்டத்தின் கீழ் மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு, ஆண்டு வேலைத் திட்டம் மற்றும் பட்ஜெட் (AWP&B) ஒப்புதல், பயன்பாட்டு சான்றிதழ்கள், கணக்காய்வு அறிக்கைகள், மாநில பங்கு உள்ளிட்ட நடைமுறைகளின் அடிப்படையில் வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு NEP 2020ஐ முழுமையாக அமல்படுத்தவில்லை என்றாலும், மாணவர்களின் கல்வி தேவைகளை கருத்தில் கொண்டு ‘RTE Entitlements’ கூறின் கீழ் ஒன்றிய நிதி விடுவிக்கப் பட்டுள்ளது.

அதன்படி, ரூ.538.39 கோடி மத்திய பங்கு தமிழ்நாடு அரசிற்கு வழங்கப்பட்டுள்ளது.

இதில் 2024-25ஆம் ஆண்டுக்கான ரூ.362.81 கோடியும், 2025-26ஆம் ஆண்டிற்கான முதல் மற்றும் இரண்டாம் தவணையாக ரூ.175.58 கோடியும் அடங்கும்.

கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட மற்றும் வழங்கப்பட்ட மத்திய நிதி விவ ரங்கள்: 5.3.2026 நிலவரப்படி,

2023-24: ஒதுக்கீடு ரூ.2,120.25 கோடி; விடுவிப்பு ரூ.1,871.96 கோடி.

2024-25: ஒதுக்கீடு ரூ.2,151.59 கோடி; விடுவிப்பு ரூ.362.81 கோடி (2025-26இல் விடுவிப்பு).

2025-26: ஒதுக்கீடு ரூ.1,896.42 கோடி; விடுவிப்பு ரூ.175.58 கோடி மீதமுள்ள நிதி வழக்கமான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்ட பின் விடுவிக்கப் படும் என்றும் பதிலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், சிவகங்கை மாவட்டம், கல்லல் ஊராட்சி ஒன்றியம், கம்பனூர் ஊராட்சிக்குட்பட்ட ஆதிதிராவிடர் காலனி பகுதியில் ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டம் 2024–25ன் கீழ் கட்டப்பட்டுள்ள சமுதாயக்கூடத்தினை, நேற்று முன்தினம் (10.3.2026) பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து சிறப்பித்தார். உடன் மாவட் ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் மரு.ஜி.அரவிந்த் உட்பட பலர் உள்ளனர்.



திருச்செந்தூர் வட்டம் ஏரலில் பத்திரப்பதிவு அலுவலகத்தினை தமிழக மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் தொடங்கி வைத்தார். நிகழ்வில் மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.உமரி சங்கர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ஜனகர், ஒன்றிய செயலாளர் கோட்டாளம், வழக்கறிஞர் அணி கிருபாகரன், வி.பி.செல்வகுமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### ஜவுளித் துறையின் திறன் மேம்பாட்டுத் திட்டம்

# திருவண்ணாமலை மாவட்டத்தில் செயல்படுத்துவதில் மறுபரிசீலனையா?

## மக்களவையில் சி.என்.அண்ணாதுரை கேள்வி!

புதுடெல்லி, மார்ச் 12-

மக்களவையில் கழக உறுப்பினர் சி.என். அண்ணாதுரை எழுப்பிய கேள்விகள் வருமாறு:



(அ) தமிழ்நாட்டில், குறிப்பாக கைத்தறி, பட்டு மற்றும் ஜவுளித் தொழிலாளர்கள் கணிசமான எண்ணிக்கையில் உள்ள திருவண்ணாமலை மாவட்டங்களில், சமர்த் (ஜவுளித் துறையில் திறன் மேம்பாட்டுத் திட்டம்) செயல்படுத்தப்படுவதை அரசு மறுபரிசீலனை செய்துள்ளதா;

(ஆ) கடந்த மூன்று நிதி யாண்டுகளில் இந்த மாவட்டங்களில் சமர்த்தின் கீழ் சேர்ந்த, பயிற்சி பெற்ற மற்றும் சான்றிதழ் பெற்ற வேட்பாளர்களின் எண்ணிக்கை, வேலைவாய்ப்பு மற்றும் சுயதொழில் முடிவுகள் பற்றிய விவரங்கள்; (இ) கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டில், குறிப்பாக திருவண்ணாமலை மாவட்டத்தில், சமர்த்தின் பயிற்சித் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட, வெளியிடப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதிகள் பற்றிய விவரங்கள்; மற்றும்

(ஈ) இந்தத் திட்டத்தின் கீழ், பயிற்சி பெற்ற இளைஞர்கள் மற்றும் கைவினைஞர்களுக்கு சந்தை இணைப்புகளை வலுப்படுத்தவும், திறன்களை நவீனப்படுத்தவும், நிலையான வேலை வாய்ப்புகளை உறுதி செய்யவும் அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்த விவரங்கள் என்ன?

இவ்வாறு அவர் கேள்விகள் கேட்டிருந்தார்.

அதற்கு ஒன்றிய ஜவுளித் துறை அமைச்சர் கிரிராஜ் சிங் விரிவாக பதிலளித்தார்.

### புவனகிரி,சேத்தியாத்தோப்பு பகுதி

# பா.ம.க. - அ.தி.மு.க. - மாற்றுக்கட்சியினர் கழகத்தில் இணைந்தனர்!

## எம்.ஆர்.கே.பி.கதிரவன் முன்னிலையில்!

கடலூர், மார்ச் 12-

கடலூர் கிழக்கு மாவட்டம், புவனகிரி மேற்கு ஒன்றியம், வீரமுடையா நத்தம் ஊராட்சியைச் சேர்ந்த கரும்பு பயிரிடுவோர் விவசாய நல சங்க தலைவர் மற்றும் முன்னாள் பா.ம.க, மாவட்ட கவுன்சிலருமான வி. ஜி.சிட்டிபாபு தலைமையில் பா.ம.க, அ.தி.மு.க,மற்றும் மாற்றுக்கட்சிகளிலிருந்து விலகி 2000 பேர், கடலூர் கிழக்கு மாவட்ட பொருளாளர் எம்.ஆர். கே.பி.கதிரவன் முன்னிலையில் தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர்.

கழகத்தில் இணைந்து கொண்டவர்கள் விவரம், சேத்தியாத்தோப்பு வார்டு கவுன்சிலர் தங்கமணி ,முருகேசன், ஆர், நடராஜன் மற்றும் வளையமாதேவி சண்முகம், வடபாக்கம் ஆர் சரவணன், வட்டத்தூர் இள மாறன், மோகன், கானூர் சோமு,

பெரிய நற்குணம் பன்னீர்,வெங்கட்ராமன், ஆலம்பாடி சரவணன், ஆதனூர் குபேந்திரன், பெரிய குப்பம் சீனு ,சின்ன குப்பம் கண்ணன் ,எறும்பூர் சுப்பிரமணியன், சின்ன நற்குணம் பிரபு ,பாலு ,அப்பாஜி ,

மதுவானை மேடு மோகன், மும்முடி சோழகன் ஆர்.வெள்ளையன், கத்தாழை கருணாநிதி, சாத்தப்பாடி வெங்கடேசன், மேல் வளையமாதேவி மதி ,ஐம்புலிங்கம், அம்பாள்புரம் சிவா, வாண்டையாங் குப்பம் மாதவன் ,வத்தராயன் தெதது மோகன் ,ஆனைவாரி சுப்பிரமணியன், அகரம் அன்புமணி ,கரைமேடு சந்திரசேகரன்,ஆலம்பாடி வையாபுரி,

அள்ளூர் வீரமணி, முருகன் ,செந்தில் ,ஆகிய மாற்றுக் கட்சியினர் 2000 பேர் எம் .ஆர் .கே. பி .கதிரவன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர்.

கழகத்தில் இணைந்தவர்கள் அனைவருக்கும் கழக இரு வண்ண துண்டுகள் அணிவித்து வரவேற்பு அளித்து வாழ்த்து தெரிவித்தார்.

இந்நிகழ்வில் புவனகிரி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.எம். மதியழகன், சேத்தியாதோப்பு நகர செயலாளர் பழனி. மனோகரன்,அம்பாள்புரம் வழக்கறிஞர் அணி நிர்வாகி வழக்கறிஞர் ஜெயச்சந்திரன், எம்.ஆர்.கே.சர்க்கரை ஆலை தொ.மு.ச,தலைவர் ராஜாராமன், விவசாய அணி ராமகிருஷ்ணன் மற்றும் கழக நிர்வாகிகள் ,சார்பு அணி நிர்வாகிகள் கலந்துகொண்டனர்



புனிதமிகு ரமலான் மாதத்தை முன்னிட்டு பத்ரு சஹாபாக்கள் நினைவாக சமய நல்லிணக்கத்தை வலியுறுத்தி திண்டுக்கல்லில் நடைபெற்ற விழாவில் திண்டுக்கல் மாநகராட்சி மேயர் இளம் ஜோதி பிரகாஷ் வேட்டி, சேலை வழங்கினார். நிகழ்ச்சியில் கழக நிர்வாகி இஸ்மாயில் தலைமை வகித்தார். சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு நகரதுணை அமைப்பாளர் அக்கீம்,மவுவி ரகமத்துல்லா ஆலிம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# மானாமதுரை நகராட்சியில் ரூ.100 கோடியில் திட்டப் பணிகள்!

## நகர்மன்றத் தலைவர் மாரியப்பன் கென்னடி தகவல்!

சிவகங்கை, மார்ச் 12-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகர் மன்ற சாதாரண கூட்டம் நகர் மன்ற அலுவலகத்தில் நகர் மன்ற தலைவர் எஸ்.மாரியப்பன் கென்னடி தலைமையில் துணைத்தலைவர் பாலசுந்தரம் முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் நகர மன்ற உறுப்பினர்கள் தங்களது வார்டுகளில் நிறைவேற்றி முடிக்கப்பட்ட பணிகள், மேலும் மேற்கொள்ள வேண்டிய பல்வேறு பணிகள் குறித்து பேசினார்கள் . இந்த கூட்டத்தில் நகர் மன்ற தலைவர் எஸ்.மாரியப்பன் கென்னடி பேசியதாவது . முதல்வர் தளபதி பதவி ஏற்றதும் மானாமதுரை மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான பேரூராட்சியாக இருந்த மானாமதுரையை நகராட்சியாக அறிவித்தார் .முதல்வர் தளபதி அவர்கள் நல்லாட்சியில் மானாமதுரை நகராட்சியில் ஐந்து ஆண்டுகளில் ரூபாய் 100 கோடியில் பல்வேறு அரசு திட்டப்பணிகள் நடைபெற்று வருகிறது. இதில் அடிப்படை வசதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளது .திட்டப் பணிகளை மக்களின் பயன்பாட்டிற்கு தரமாகவும் விரைவாக வும் முடிக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது . தொடர்ந்து உறுப்பினர்களின் கோரிக்கையை அரசிற்கு அனுப்பி வைத்து நிறைவேற்றப்படும் . அரசின் திட்டங்கள் முழு அளவில் நிறைவேறி மக்களுக்கு பயன்படும் வகையில் அதிகாரிகள் ஒத்துழைக்க வேண்டும் . இவ்வாறு நகர் மன்ற தலைவர் பேசினார்.



கடலூர் கிழக்கு மாவட்டம், புவனகிரி மேற்கு ஒன்றியம், வீரமுடையா நத்தம் ஊராட்சியைச் சேர்ந்த கரும்பு பயிரிடுவோர் விவசாய நல சங்கத் தலைவர் மற்றும் முன்னாள் பா.ம.க,மாவட்ட கவுன்சிலருமான வி.ஜி.சிட்டிபாபு தலைமையில் பா.ம.க, அ.தி.மு.க,மற்றும் மாற்றுக்கட்சிகளிலிருந்து விலகி 2000 பேர், கடலூர் கிழக்கு மாவட்டப் பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன் முன்னிலையில் தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர்.